# பத்திரிக்கைச் செய்தி

**செ.வெ.எண்:** **நாள்:**

## திருநெல்வேலி மாவட்டம்

**சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை,மாவட்ட சமூகநல அலுவலகத்தின் கீழ் செயல்பட்டு வரும் ஒருங்கிணைந்த சேவை மையம் வள்ளியூர் மற்றும் மாவட்ட மகளிர் அதிகார மையத்திற்கு தற்காலிக பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் இரா.சுகுமார் இ.ஆ.ப. அவர்கள் தகவல்.**

குடும்பத்தில் மற்றும் சமுதாயத்தில் பெண்களுக்கு எதிரான பிரச்சனைகளைத் தடுக்கும் நோக்கத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையின் கீழ் வள்ளியூர் ஒருங்கிணைந்த சேவை மையம் (One Stop Centre) இயங்கி வருகின்றது. அதில் சுழற்சி முறையில் வழக்கு பணியாளர்-1 பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் சுழற்சி முறையில் பணியாற்றுவதற்கு திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த பெண் மற்றும் மூன்றாம் பாலினத்தினர் ஆகிய விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன மற்றும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், அவர்களை தொழில் முனைவோர்களாக மாற்றவும், அவர்களின் பாதுகாப்பிற்கான உதவி எண்கள் குறித்தும், குழந்தை திருமணம் தடுப்பு போன்றவற்றிற்கான விழிப்புணர்வு வழங்கிட செயல்பட்டு வரும் மாவட்ட மகளிர் அதிகார மையத்தில் தரவு நுழைவு பணியாளர் -1.

(Data Entry Operator) பணியிடத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றுவதற்கு திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. விண்ணப்பங்கள் https://tirunelveli.nic.in/ என்ற திருநெல்வேலி மாவட்ட இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை மாவட்ட சமூகநல அலுவலர், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம் என்ற முகவரிக்கு **ஜீன் 30ம்** தேதிக்குள் தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் விபரங்களுக்கு மாவட்ட சமூக நல அலுவலத்தை நேரில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாவட்ட ஆட்சித் தலைவர்
திருநெல்வேலி

# இணைப்பு-1

திருநெல்வேலி மாவட்டத்தில் தனியார் மற்றும் பொது இடங்களில், குடும்பத்தில், சமுதாயத்தில், பணிபுரியும் இடங்களில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு உதவும் வகையில் வள்ளியூரில் ஒருங்கிணைந்த சேவை மையம் (ஒன் ஸ்டாப் சென்டர்) செயல்பட்டு வருகின்றது. அதில் சுழற்சி முறையில் 24 மணி நேரமும் பணிபுரிய கீழ்க்கண்ட நிலைகளில் ஒப்பந்த அடிப்படையில் தேர்வு செய்யப்படவுள்ளனர். திருநெல்வேலி மாவட்டத்தில் கீழ்க்கண்ட பணியிடங்களுக்குத் தகுதியான நபர்கள் திருநெல்வேலி மாவட்ட சமூக நல அலுவலகத்தில் தங்கள் சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பதவி | காலிப் பணியிடம் | படிப்பு & முன் அனுபவம் | சம்பளம் |
|---|---|---|---|---|
| 1. | வழக்கு பணியாளர் | 1 | சமூகப்பணி அல்லது உளவியல், சமூகவியல் இளங்கலைப்பட்டம் பயின்று தன்னார்வ தொண்டு நிறுவனங்களில் 2 வருடம் முன் அனுபவம் பெற்றவராக இருத்தல் வேண்டும். | ரூ.18,000/- |

நிபந்தனைகள்:

1. வழக்கு பணியாளர் பணியிடத்திற்கு பெண் விண்ணப்பத்தாரர்களிடமிருந்து மட்டுமே விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது.
2. திருநெல்வேலி மாவட்டத்தைச் சார்ந்தவராக இருத்தல் வேண்டும்.
3. மேற்காணும் பணியிடங்களுக்கு 24 மணி நேரமும் சுழற்சி முறையில் பணியாற்ற தயார் நிலையில் இருத்தல் வேண்டும்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

மாவட்ட சமூகநல அலுவலர்,
மாவட்ட சமூகநல அலுவலம்,
மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகம்,
திருநெல்வேலி மாவட்டம்.

மாவட்ட ஆட்சித்தலைவர்
திருநெல்வேலி

மாவட்ட சமூகநல அலுவலர்,
திருநெல்வேலி

PDF Scanner ACE Scanner